# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

# அ.வ எண் 68/2013

| | |
|---|---|
| பெயர் | .. சிவாஜி ராஜன்(பிசா1) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ஆண்டு ஜீன் மாதம் 05 ம்நாள் இந்நீதிமன்ற உதவியாளர் T.ரவிக்குமார் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
10.06.2024

**முதல் விசாரணை:**

எனது பெயர் சிவாஜி ராஜன். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. நான் எனது தரப்பு முதல்விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். 18.06.2003 தேதிய உயில் ஆவணம் **பிசாஆ.6( வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணை உடன் குறியீடு செய்யப்படுகிறது** ), 21.4.1976 தேதிய ஒப்பந்தம் **பிசாஆ. 7,** 28.11.1971 தேதிய பொதுச்சுவர் ஒப்பந்தம் **பிசாஆ. 8** , எனது தாயார் புஷ்பகாந்தி அம்மாள் பெயரில் உள்ள நில உரிமை பதிவேடு **பிசாஆ. 9,** கோவில்பட்டி வட்டசட்ட பணிகள் குழுவில் இருந்து எனக்கு வரப்பெற்ற அறிவிப்பு **பிசாஆ. 10,** இவ்வழக்கு சொத்து சம்பந்தப்படாத சொத்துக்களுக்குரிய பட்டா **(5 எண்ணம்) பிசாஆ.11,** கோவில்பட்டி நாடார் உறவின் முறை சங்கம் வழங்கிய ருத்ரபூமி ரசீது **பிசாஆ.12,** எனது தாயார் பெயரில் உள்ள இணைய வழி தரவிறக்கம் செய்யப்பட்ட பட்டா **பிசாஆ. 13,** 29.11.1973 தேதியில் எனது தாயார் எழுதிய விண்ணப்பம் **பிசாஆ.14,** நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகளின் வழக்கை எங்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை:** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.
திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்) D.மாரிக்காளை,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.